**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 97 **நாள்** : 14.02.2026

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட தரமணி 5சி பேருந்து நிறுத்தம் அருகில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையக் கட்டடத்திற்கான பணியினை இன்று அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-178க்குட்பட்ட தரமணி 5சி பேருந்து நிறுத்தம் அருகில் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பல்நோக்கு மையம் கட்டடம் கட்டுவதற்கு இன்று (14.02.2026) அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளும், பொது சுகாதாரப் பணிகளும், சேவைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் பொதுமக்கள் மிகவும் பயன்பெறும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து பணி தேர்வு செய்யப்படுகிறது. அவ்வாறாக இன்று மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் கட்டடப்படவுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தில் தரைத்தளத்தில் 82.20 ச.மீ. பரப்பளவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கால்நடை மருத்துவ மையமும், முதல் தளத்தில் 82.20 ச.மீ. பரப்பளவில் உடற்பயிற்சிக் கூடமும் அமைக்கப்படுவதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மிகவும் பயன்பெற உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பாஸ்கரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**